# <u>சிவகங்கை நகராட்சி</u>

## <u>சாதாரணக்கூட்டம்</u>

2019ம் ஆண்டு ஜீன் 28ம் நாள் விகாரி வருடம் ஆனி 13ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பி.அயூப்கான், பி.காம்.,எம்.ஏ.,பி.எட்.,**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**

**சிவகங்கை நகராட்சி.**

## பொருள்கள்

**1.**சிவகஙகை நகராட்சி ஆணையாளா் அவா்களின் 2019 ஆம் ஆண்டு ஜீன் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பாா்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீா்மான எண்:**412

**தீா்மானம்:**அனுமதிக்கப்பட்டது.

**2.** சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை பராமரித்தல் மற்றும் பள்ளி வளாகத்தில் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்..166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீா் வழஙகல் துறை நாள்..23.11.2016ன் படி உள்ளாட்சி மன்றஙகளுக்கு பொறுப்புகள் வழஙகப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு பணியாளா்களை நியமனம் செய்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், அதற்குண்டான செலவினத்தை உள்ளாட்சி மன்றஙகள் வசிக்கும் கல்வி நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அரசாணையில் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 3 அரசு பள்ளிகள் மற்றும் 3 நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறை பராமரிப்பு பணி, பள்ளி வளாக பராமரிப்பு பணி ம.ற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கும் அரசாணையின் படி 4 பெண் பணியாளா்கள், 2 ஆண் பணியாளா்கள் மொத்தம் 6 துப்புரவு பணியாளா்களை கொண்டு பணி மேற்கொள்ள 15.05.2018 முதல் 14.05.2019 வரை ஓராண்டு காலத்திற்கு திரு. பி.மோகன் ஒப்பந்ததாரருக்கு பணியை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே பணிகாலம் முடிவடைந்து விட்டதால் 3 மாதஙகளுக்கு காலநீட்டிப்பு செய்யவும், மேலும் பணிகளை ஏற்கனவே அதே ஊதிய விகிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களின் செந்தர விகிதத்தின் படி தினக்கூலி அடிப்படையில் 6 துப்புரவு பணியாளா்களை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதார அவசியம் கருதி பணியை மேற்கொள்ளவும், மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீா்மான எண்:**413

**தீா்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**3.** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீா் வழஙகு (எம்.ஏ ஐஏ) துறை அரசாணை எண்..(எம்.எஸ்) 166, நாள்..23.11.2016ல் கல்வி நிதியில் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் சுற்றுப்புறம் சுத்தம் செய்ய கல்வி நிதியில் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளதால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மூன்று அரசு பள்ளிகள், மூன்று நகராட்சி பள்ளிகளில் கழிவறைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி வளாகப் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள 2 ஆண் பணியாளா்கள் மற்றும் 4 பெண் பணியாளா்கள் ஆக மொத்தம் 6 துப்புரவு பணியாளா்களை தினக்கூலி அடிப்படையில் தனியாா் மூலம் (ஒப்பந்தப்புள்ளி மூலம்) பணிகளை மேற்கொள்ள 21.03.2018ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.மோகன் ஒப்பந்ததாரருக்கு 14.05.2018 அன்று வேலை உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. மேலும் இந்நகா் மன்றத் தீா்மான எண்..207, நாள்..28.03.2018ல் செலவின தொகையை பொது நிதியில் செலவு மேற்கொள்ள தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியானது அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளான பணி என்பதால் திருத்தம் செய்து கல்வி நிதியில் செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:414**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

4. இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண்..4 மற்றும் கடை எண்..11ம் அது போல தொண்டி ரோடு நகராட்சி வணிக வளாகம் முதல் தளம் அறைகள் சிறியது மற்றும் பெரியது என இரண்டும், அதுபோல 2018–2021 பொது ஏலத்தில் குத்தகைக்கு எடுக்கப்பட்டு 2019–2020ம் ஆண்டு குத்தகை செலுத்தாமல் பூட்டி சீலிடப்பட்ட காந்தி வீதி பெண்கள் மருத்துவமனை அருகில் உள்ள கட்டண கழிப்பறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் தீயணைப்பு நிலையம் எதிரில் உள்ள கட்டண கழிப்பறை, மானாமதுரை சாலை நகராட்சி எரிவாயு மின் மயானம் அருகில் உள்ள கட்டண கழிப்பறை ஆகியவற்றை மீண்டும் பொது ஏலம் நடத்திடவும்,

1) பேருந்து நிலையம் கடை எண்..4க்கு ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் தொகை 1,50,000 மற்றும் கூடுதல் காப்புத் தொகை ரூ.1,00,000 மின் வைப்புத் தொகை ரூ.2000

2) பேருந்து நிலையம் கடை எண்..11க்கு ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் தொகை ரூ.60,000 கூடுதல் காப்புத் தொகை ரூ.60,000

3)பேருந்து நிலையம் எதிர்புறம் தொண்டி ரோடு நகராட்சி வணிக வளாகம், முதல் தளம் சிறிய அறை ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.30,000 கூடுதல் காப்புத் தொகை தொகை ரூ.20,000

4)பேருந்து நிலையம் எதிர்புறம் தொண்டி ரோடு நகராட்சி வணிக வளாகம் முதல் தளம் அறை பெரியது ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.50,000 கூடுதல் காப்புத் தொகை ரூ.30,000

5)காந்தி வீதி பெண்கள் மருத்துவமனை பெண்கள் மருத்துவமனை அருகில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் தொகை ரூ15,000 கூடுதல் காப்புத் தொகை ரூ.15,000

6)மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தீயணைப்பு நிலையம் எதிரில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் தொகை ரூ.10,000 கூடுதல் காப்பு தொகை ரூ.10,000

7)மானாமதுரை சாலை, நகராட்சி மின் மயானம் அருகில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.20,000 கூடுதல் காப்புத் தொகை ரூ.10,000

மேற்கண்ட இனஙகளுக்குரிய பொது ஏலம் விளம்பரம் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரப்படுத்திடவும், அனைத்து வெலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

ஏல அறிவிப்பினை மன்றம் அனுமதித்தும், தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் மற்றும் அனைத்து செலவினஙகளுக்கும் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மான எண்:415**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**5.** இந்நகராட்சிக்கு சொந்தமான குண்டூரணி அருகில் உள்ள சமாதி உட்பட மொத்தம் உள்ள **70080** சதுர அடி இடம் தங்களுக்கு சொந்தமானது என திருமதி. பிரேமா வகையறா மாவட்ட முன்சிப் கோர்ட்டில் தாக்கல் செய்த வழக்கு எண்..ஒ.எஸ்**5/2013**ல் ஒருதலைப்பட்சமாக திருமதி. பிரேமா வகையறாவிற்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதை ரத்து செய்யக் கோரி நகராட்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் **4**ம் வழியாக திரு. தங்கராஜ் என்பவர் **04.09.2015**ல் இறந்து போய்விட்டதாகவும், மேற்படி விபரத்தை வழக்கில் குறிப்பாணை தாக்கல் செய்யாததால் திரு. தங்கராஜ் என்பவரின் வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்க்க காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் காலதாமதத்தை மன்னிக்க கோரும் மனு ஐ.ஏ.எண்..**620/2018** எண்ணிட்டு கோப்புக்கு எடுக்கப்பட்ட மனுவில் **25.06.2019**ம் தேதி வாய்தா ஏற்பட்டு இறுதி ஆணை பிறப்பிக்க செலவுத் தொகையாக ரூ.**1000/–**ம் மட்டும் நகராட்சி வழக்கறிஞர் திரு. ராஜசேகரன் மூலம் மாவட்ட முன்சீப் கோர்ட்டிற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

நகராட்சி வழக்கறிஞர் திரு. ராஜசேகரன் அவர்களின் **24.06.2019**ம் தேதிய கடிதத்தின் படி வழக்கு செலவுத் தொகையாக ரூ.**1000/–** (ஆயிரம்) மட்டும் வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ஆணையாளர் (ம) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழக்குத் தொகை ரூ.**1000/–**ம் (ஆயிரம்) வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்:416**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**6.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அலுவலக ந.க.எண்..**3183/2013/B3** நாள்..**16.12.2018**ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அலுவலக பணிக்கு டோனர் நகல்கள் எடுத்தமைக்கு TIRUPAHI OFFICE PRODUCCT நிறுவனத்திற்கு ரூ.**2637/–** ( இரண்டு ஆயிரத்து ஆறு நூற்று முப்பத்தி ஏழு) ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..–**

மேற்கண்ட தொகை ரூ.**2637/–**ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:417**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**7.** இந்கராட்சிக்குத் தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், டோனர்கள், ரிப்பன், படிவஙகள், குடிநீர் வரி நோட்டீஸ், தொழில் வரி நோட்டீஸ், சொத்து வரி நோட்டீஸ் மற்றும் அனைத்து வரி மற்றும் வரியில்லா பணம் வசூல் செய்யும் ரசீதுகள் எழுது பொருட்கள், படிவஙகள், பதிவேடுகள் அம்மா உணவத்திற்கு தேவையான டோக்கன்கள், நோட்டுகள், தலையுரை, கையுரை ஆகியவை வாஙகவதற்கு **2019–2020** ஆம் ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.**10** இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..–**

மேற்கண்ட பொருட்கள் அவசர அவசியம் கருதி முன் அனுமதி வழஙகியதை வாஙக மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:418**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

8. UIDSSMT திட்டத்தின் சுழல் நிதி 2018–19 இன் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் இணைப்பு பெறாத கட்டிடஙகளுக்கு ரூ.305 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் இணைப்பு பணியானது ஒப்பந்ததாரர் திருவாளர்கள். M.M கன்ஸ்டரக்சன் நிறுவனத்தில் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.305 இலட்சத்தில் ரூ.259.73 இலட்சம் டுபிட்கோ அலுவலகத்திடமிருந்து வட்டியில்லா கடனா பெற்றும் ரூ.45.27 இலட்சம் நகராட்சியின் பஙகுத் தொகையாக வழஙகி பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக வரும் குடிநீர் இணைப்புதாரர்களிடமிருந்து வைப்புத் தொகை, இணைப்பு கட்டணம், சாலை சீரமைப்பு கட்டணம் மற்றும் இதர கட்டணஙகள் ஆகியவற்றிற்கான மொத்த மதிப்பீட்டு தொகையை 10 சமதவணை முறையில் 6 மாத காலத்திற்கு ஒரு முறை சொத்து வரியுடன் சேர்த்து 5 வருடஙகளுக்குள் வசூலித்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>..–**

சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட பகுதியினை தூய்மையான நகராமாக உருவாக்குவதற்கு, இத்திட்டத்தினை விரைவாக முடிப்பதற்கு ஏதுவாகவும், இணைப்பிற்குரிய மதிப்பீட்டு தொகையினை 10 சமதவணைகளில் 6 மாத்திற்கு ஒரு முறை சொத்து வரியுடன் சேர்த்து 5 வருடஙகளுக்குள் வசூலித்துக் கொள்ள தனி அலுவலர் அனுமதி வழஙகலாம்.

**தீர்மான எண்:419**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
சிவகஙகை நகராட்சி